**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 86/2019**

**2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**வா.சா.1 ( வீராயி )**

**கு.வி (1ம் பிரதிவாதி தரப்பில்)**

நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்திற்கு விபரங்கள் சொன்னது நான் தான் என்றால் சரிதான். பிராது தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை பிராதுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டபடும் 12.07.2012 தேதிய என் தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். 2012ல் நோட்டீஸ் அனுப்பிவிட்டு 2014ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன், இடைப்பட்ட காலதாமதத்திற்கு காரணம் என்ன என்றால் விடுபட்ட சொத்துக்களை எடுப்பதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. பிராதில் தாவா சொத்துக்கள் பூர்வீக பாத்தியமானது என்றும், பூர்வீக வருமானத்தில்வைத்து எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றும் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு குறிப்பிட்டுள்ளதில் எது எது பூர்வீக சொத்துக்கள் என்றால் பிரகரமேடு, மம்பட்டிசேரி, பொட்டைச்சேரி, ஓட்டேரிதலை, கட்டிக்குளம் முதல் காலனி செல்லும் மெயின்ரோடில் உள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். கிரையம் வாங்கிய சொத்துக்கள் எது என்றால் மிளகனூர், காலனி ஓரத்தில் உள்ள 1 ஏக்கர் சொத்து, கட்டிக்குளத்தில் உள்ள ஓட்டுவீடு, மானாமதுரையில் உள்ள பைபாஸ் இடம் ஆகும். நான் சொன்னது மட்டும் தான் சொத்துக்கள் வேறு எதுவும் கிடையாது என்றால் இருக்கு, அதை இனிமேல் தான் கண்டுபிடிக்க வேண்டும். எனது தகப்பனார் என்ன தொழில் செய்தார் என்றால் காண்ட்ராக்டர். 1ம் பிரதிவாதி காண்ட்ராக்டர் வேலை செய்தாரா என்றால் இல்லை. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 1986. எனது தகப்பனார் பார்த்துவந்த காண்ட்ராக்டர் தொழிலை தான் 1ம் பிரதிவாதி உரங்காபுலி என்பவரும் தொடர்ந்து காண்ட்ராக்டர் தொழில் செய்துவந்தார் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் நோட்டீஸ் அனுப்பியதில் 22 இலக்க சொத்துக்களை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். விளம்பர அறிக்கை செய்ததில் 22 இலக்க சொத்து தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததில் 25 இலக்க சொத்து தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த 25 இலக்க சொத்தில் எந்த எந்த சொத்துக்கள் பூர்வீக சொத்து என்றும், கிரையம் வாங்கிய சொத்து என்றும் குறிப்பிட்ட சொல்லமுடியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நான் தாக்கல் செய்த பிராதிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ததததை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கண்டுள்ள மு.முனியாண்டிதேவர் எனது தாய்மாமன் என்றால் சரிதான். சி.முத்துராமலிங்கம் எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். எங்களது பூர்வீக சொத்துக்களை பொறுத்து மேற்படி எனது தாய்மாமன், பெரியப்பா மகன், எனது தகப்பனார், எனது சகோதரர்கள் ஆகியோர் சேர்ந்து 11.03.1977ம் தேதி பாகவிஸ்தி ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. பாகவிஸ்தி ஏற்படுத்திய விசயம் தெரிந்து கொண்டு வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பாகவிஸ்திபடி 1,2 பிரதிவாதிகள் பூர்வீக சொத்துக்களை தனிதனியாக அவர்கள் பேரில் பட்டா பெயர் மாற்றம் செய்து நாளது தேதிவரை தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது பிராதில் கண்ட 25 இலக்க சொத்தான சர்வே எண்.77ல் கண்ட சொத்தை 1ம் பிரதிவாதி தனது தனிப்பட்ட வருமானத்தில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. 25 இலக்க சொத்து 1ம் பிரதிவாதியின் தனித்த கிரைய சொத்து என்றும், அதையும் பாகம் கேட்டு பரிகாரம் கோரியதும் சட்டபடி கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பிராதில் தாக்கல் செய்துள்ள 21வது இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 15 செண்ட். நான் சொன்னது போல் 15 செண்ட் இல்லை, 7 செண்ட் தான் தற்போது உள்ளது என்றால் சரியல்ல. 21வது இலக்கத்தில் கண்ட ஓட்டுவீடு 1ம் பிரதிவாதியின் மாமியாருக்கு பாத்தியமானது என்றால் சரியல்ல. 21வது இலக்க சொத்து பொட்டையம்மாளுக்கு சொந்தமானது என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.21வது இலக்க சொத்தையும் பொட்டையமாள் இறந்த பிறகு அவரது வாரிசான 1ம் பிரதிவாதியின் மனைவி அம்மாளு என்பவர் அடைந்து நாளது

தேதிவரை அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பிராதில் கண்ட 2,6,7,10,16 இலக்க சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார், 3ம் பிரதிவாதி பிரியா வாதியாகவும் இந்த நிர் 1ம்பிரதிவாதி உரங்காபுலி, 2ம்பிரதிவாதி முத்துராமலிங்கம், 3ம்பிரதிவாதி வீராயி ஆகிய நான், 4ம்பிரதிவாதி தாயார் காளியம்மை ஆகியோர்கள் பிரிதிவாதிகளாக இருந்து மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.649/1989 என்ற எண்ணில் வழக்கு நடைபெற்று முடிவுற்றுள்ளது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**